# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## 2007 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, முதித சமூக சேவைகள் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

*(2007 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

2007, யூன் மாதம் 22 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா 10.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2007 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, முதித சமூக சேவைகள் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2007 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப் பட்டது.]

ச.வ.ஓ. கூட் 12/2005

### முதித சமூக சேவைகள் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கான தொரு சட்டம்

"முதித சமூகசேவைகள் மன்றம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான மன்றம் ஒன்று, அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்திற்காக இதற்கு முன்னர் இலங்கை, குருணாகலையில் தாபிக்கப்பட்டிருந்த தாதலாலும் : முன்னுரை.

அத்துடன் சொல்லப்பட்ட மன்றமானது, எப்பல்வேறு குறிக் கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ள தாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாத லாலும், அத்தகைய விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தி னால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**1.** இச்சட்டம், 2007 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, முதித சமூக சேவைகள் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2.** இச்சட்டம் தொடங்கும் தேதியிலிந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) முதித சமூக சேவைகள் மன்றத்தின் தற்போது உறுப்பினர்களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாப னத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படு பவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும், (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தானம்" எனக் குறிப்பீடு செய் யப்படும்) "முதித சமூக சேவைகள் மன்றம்" என்னும் பெயரின் கீழும் மகுடத்தின்கீழும் இடையறாவழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருத்தல் வேண்டும். அது அப்பெயர் கொண்டு வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் முதித சமூக சேவைகள் மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம் ; அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்க வும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றவும், அது முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக் கோள்கள் பின்வருவனவாயிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :—

(அ) ஏதேனும் சமூக, சமய மற்றும் இன வர்க்கத்தைச் சார்ந்த பிள்ளைகளுக்கும் உதவி ஒத்தாசை வழங்குதல்;

(ஆ) வறிய பிள்ளைகளுக்கு உறைவிடம், ஆகாரபானம், ஆடையணிகள், கல்வி மற்றும் பாதுகாப்பையும் வழங் குதல் ;

(இ) இலங்கையினுள் சிறுவர் இல்லங்களை நிறுவுவதற்கு நிதி வழங்குவதுடன், அவற்றை தொழிற் கல்விப் பயிற்சி நிலையங்களாகத் தரமுயர்த்துதல் ;

(ஈ) வேறுபட்ட இன, மத, தொழிலற்ற இளைஞரின் நன்மை கருதி தொழிற்பயிற்சி நிலையங்களைப் பராமரித்தல் ; அத்துடன்

(உ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள் எல்லாவற்றை யும் அல்லது அவற்றினுள் ஏதேனுமொன்றினை எய்துவதற்கு இடைநேர்விளைவான அல்லது உகந் தனவான வேறு எல்லாச் செயல்களையும் கருமங் களையும் செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**4.** இச்சட்டத்தினதும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தகை யனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களை யும், காரியங்களையும், செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்று வதற்கும் கூட்டுத்தாபனம், தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள், வங்கிக் கணக்குகளைத் தொடங்கவும்,

நடாத்தவும், முடிவுறுத்தவும், பிணைப் பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி பணங்களை கடனாகப் பெறவும் அல்லது திரட்டவும், மானியக் கொடைகளையும் நன்கொடைகளையும் பெறவும் அல்லது சேகரிக்கவும், அதன் நிதிகளை முதலீடு செய்யவும், அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும், சேவையாளர்களையும் வேலையில் ஈடுபடுத்தல், வேலைக்கமர்த்துதல், வேலையிலிருந்து நீக்குதல் ஆகியவற்றுக்குமான தத்துவமும் அடங்கும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், இச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதிகளால் ஏற்பாடு செய்யப்பட்டு அவற்றுக்கிணங்கத் தேர்ந்தெடுக்கக்கூடியவாறான பதவிதாங்குநர்களையும் அத்தகைய வேறு ஆட்களையும் கொண்ட நிறைவேற்றுக் குழுவினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது நிறைவேற்றுக் குழுவானது இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு உடனடுத்து நேர்முந்திய நாளன்று பதவி வகிக்கும் நிறைவேற்றுக் குழுவாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6.** (1) ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மை கொண்டு பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்கும் அல்லது எவற்றுக்கும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :—

(அ) உறுப்பினர்களை வகுத்தலும், உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளல், அவர்கள் விலகுதல் அல்லது அவர்களை விலக்குதல் ;

(ஆ) பதவிதாங்குநர்களைத் தெரிவு செய்தல், பதவிதாங்குநர் பதவியிலிருந்து விலகுதல் அல்லது பதவியை வறிதாக்குதல், அவர்களது தத்துவங்கள், கடமைகள், நடத்தை ;

(இ) நிறைவேற்றுச் சபையின் உறுப்பினர்களைத் தெரிவு செய்தல், அதன் தத்துவங்கள், நடத்தை, கடமைகள் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்களினதும் முகவர்களினதும் சேவையாளர்களினதும் தத்துவங்கள், நடத்தை, கடமைகள் ;

(உ) கூட்டுத்தாபனத்தினதும் ஒழுங்கமைப்பினதும் கூட்டங்களில் கடைப்பிடிக்கவேண்டிய நடவடிக்கை முறை அவற்றைக் கூட்டுதல், நடாத்துதல் அத்தகைய கூட்டங்களின் நேரங்கள், இடங்கள், அறிவித்தல்கள், நிகழ்ச்சி நிரல் அவற்றுக்கான கூட்ட நடப்பெண் ; அத்துடன் அவற்றில் அலுவல்களை நடாத்துதல் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமைசெய்தலும், அதன் நிதிகளின் கட்டுக்காவல், அதன் கணக்குகளைப் பேணுதல் மற்றும் கணக்காய்வு செய்தல் ; அத்துடன்

(எ) பொதுவாக, கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தலும் அதன் குறிக்கோள்களை எய்துதலும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்படும் விதி எதுவும் அதே போன்ற கூட்டத்திலும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதியொன்று ஆக்கப்படும் அதேமுறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்க்கப்படலாம் அல்லது நீக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் அனைவரும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

*மன்றத்தினால் செலுத்தப்படவுள்ளதும் மன்றத்திற்குச் செலுத்தப்படவுள்ளதுமான கடன்கள்.*

**7.** இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு உடனடுத்து நேர்முந்திய நாளன்று மன்றத்திற்குரிய எல்லாக் கடன்களும் பொறுப்புளும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும் கொடுத்துத் தீர்க்கப்படுதலும் வேண்டுமென்பதுடன் அந்நாளன்று மன்றத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும் செலுத்தப்படுதற்குரிய ஒப்பப் பணங்கள், உதவுதொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கத்திற்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**8.** கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, மானியக் கொடை, கொடை, கொடுத்துமாற்றல், இறுதிவிருப்பாவணக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறு வகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும், வைத்திருக்கவும், கூட்டுத்தாபனம் சட்டப்படி ஆற்றலும் தகுதியும் உடையதாதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஆதனமெல்லாம் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அதனை விற்க, ஈடுவைக்க , குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையாள அல்லது பொறுப்பிக்கவுமுள்ள முழுத் தத்துவத்துடன் கூட்டுத் தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**9.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, தலைவர், செயலாளர் அல்லது பொருளாளர் முன்னிலையிலன்றி எத்தகையது மான சாதனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாதென்பதுடன், அவர்கள் தாம் சமுகமளித்தமைக்குச் சான்றாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களை எழுதி கையொப்பமிடுதல் வேண்டும். அப்படி கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதனின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

*குடியரசினதும் எனையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**10.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசினது உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக் கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும், வேறு எவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**11.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, பொல்ஹேன்கொடை வீதி, கிருளபனை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*